**பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் 2024-2025**

**X-STD SAMPLE QUESTION PAPER 2024-2025**

**தமிழ் (TAMIL 006)**

**கால அளவு; 3 மணி** **மொத்த மதிப்பெண்கள்; 80**

**Time allowed 3 Hrs** **Maximum Marks:80**

---

**General Instruction:**

**பொதுவான வழிமுறைகள்;**

**The questions paper contains FIVE section.**

**இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.**

**SECTION –A(Reading ) 10 Marks**

**பகுதி – அ படித்தல் திறன் -10 மதிப்பெண்கள்**

**SECTION –B(Grammar) 12**

**பகுதி – ஆ இலக்கணப் பகுதி – 12 மதிப்பெண்கள்**

**SECTION- C (Main Course Book) 31 Marks**

**பகுதி –இ இலக்கியம் – 31 மதிப்பெண்கள்**

**SECTION- D (Non-Detail) 10 Marks**

**பகுதி – ஈ துணைப்பாடம் – 10 மதிப்பெண்கள்**

**SECTION – E (Creative Writing) 17 Marks**

**பகுதி – உ படைப்பாற்றல் – 17 மதிப்பெண்கள்**

---

**இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற 10 பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.**

**இந்த வினாத்தாளில் 14 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.**

**எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**

**Please check that this question paper contain 10 printed pages.**

**Please check that this question paper contain 14 parts of the question.**

**Please write down the serial number of the question before attempting it.**

**SECTION-A (READING) 10 MARKS**

**பகுதி –அ ( படித்தல் திறன்) 10 மதிப்பெண்கள்**

**1.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. (5X1=5)**

கலிலியோ 26 வயதிலேயே பைசா பல்கலைக்கழகத்தில் கணிதத்துறைப் பேராசிரியராக உயர்ந்தார். அவருக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பே, புராதனக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் மக்கள் கண்மூடிப் பின்பற்றி வந்தனர். கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டாட்டில்தான் எல்லாரையும் விட உயர்ந்தவராகக் கருதப்பட்டார். அவருடைய சூத்திரங்களைப் பற்றிக் கேள்வி எழுப்புவது இழுக்காகக் கருதப்பட்டது. ஒரு பொருள் என்ன வேகத்தில் கீழே விழுகிறது என்பதில் அப்பொருளின் எடைக்கு எந்தப் பங்கும் இல்லை என்பதை நிருபித்தார் கலிலியோ. ஒரு பொருள் கீழே விழும் வேகம், அது எதிர்கொள்ளும் காற்றுத்தடையைப் பொறுத்தது என்றார் அவர். இது அரிஸ்டாட்டிலின் சூத்திரத்துக்கு மாறாக இருந்தது. தன்னுடைய கண்டுபிடிப்பை கலிலியோ நிருபித்துக் காட்டினார் என்றாலும், அவருடைய கூற்றை நம்ப மறுத்தனர். அரிஸ்டாட்டிலின் ஒரு கொள்கையை நிராகரித்து மறுத்தால் அவருடைய இதர கொள்கைகளையும் மறுக்க வேண்டிய நிலை வந்துவிடக்கூடும் என்று அஞ்சினர். கலிலியோவுக்கு ஆதரவுதர ஒருவர்கூட முன்வரவில்லை. ஆனால் அவருடைய கொள்கையில் உறுதியாக இருந்தார். பின்னர் அவருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது புகழும் பெற்றது.

வினாக்கள் :

(i) கலிலியோ எந்தத்துறையில் பேராசிரியராக உயர்ந்தார்?

(A ) தமிழ்த்துறை (B) கணிதத்துறை

(C) ஆங்கிலத்துறை (D) அறிவியல்துறை

(ii) அரிஸ்டாட்டில் எந்த நாட்டுத் தத்துவஞானி?

(A) கிரேக்கம் (B) ரோம் (C) இந்தியா (D) ஜெர்மன்

(iii)கலிலியோ எந்த வயதில் பைசா பல்கலைக்கழகத்தில் கணிதத்துறைப் பேராசிரியராக உயர்ந்தார்.?

(A) 25 (B) 28 (C) 26 (D) 3

(iv) ஒரு பொருள் என்ன வேகத்தில் கீழே விழுகிறது என்பதில் அப்பொருளின் எடைக்கு எந்தப் பங்கும் இல்லை என நிரூபித்தவர் யார்?

(A) அரிஸ்டாடில் (B) தாம்சன் (C) கலிலியோ (D) இராமானுஜம்

(v) புராதனக் கொள்கைகளையும்,நம்பிக்கைகளையும் மக்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கண்மூடிப் பின்பற்றி வந்தனர்?

(A) 200 (B) 500 (C) 300 (D) 400

**2.பின்வரும் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கேற்ற விடை எழுதுக. (5X1=5)**

உண்ணா நோன்பு இருப்போர் வடதிசையை நோக்கி அமர்வது வழக்கமாக இருந்திருக்கிறது. கவுந்தியடிகளும் வடதிசை நோக்கி அமர்ந்துதான் உயிர் துறந்திருக்க வேண்டும்.அந்நாளிலே,வடபுலம் புண்ணியத்திசையாகக் கருதப்பட்டது.சோழநாட்டின் மாமன்னனான கரிகால் வளவன் வடபுலம் சென்றதைக் கூறுமிடத்து "புண்ணியத் திசை முகம் போயினன்"என்கிறார் இளங்கோ. வடபேரிமய மலையில்தான் சிவபெருமான் உறையும் கயிலாயம் இருப்பதாகத் தமிழர் நம்புகின்றனர்.அதனால் வடபுலம் புண்ணியத் திசையாகக் கருதப்பட்டிருக்கலாம்.

வினாக்கள்:

(i) கரிகால் வளவன் வடபுலம் சென்றதைக் குறிக்கும் தொடரை எழுதுக.

(ii) புண்ணியத் திசையாகக் கருதப்பட்ட திசை எது?

(iii) சோழ நாட்டின் மாமன்னன் யார்?

(iv) கயிலாயம் இருப்பதாகத் தமிழர் நம்பிய மலை எது?

(v) உண்ணா நோன்பு இருப்போர் எத்திசை நோக்கி அமர்வது வழக்கமாக இருந்தது?

**SECTION-B {GRAMMAR} 12 MARKS**

**பகுதி-ஆ (இலக்கணப் பகுதி) 12 மதிப்பெண்கள்.**

**3. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3**

(i) வினையாலணையும் பெயர்

(A) பொறுத்தார் (B) கெடுதல் (C) எங்ங்கிறைவன் (D) உரனசைஇ

(ii) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(A) தாய்சேய் (B) மலர்க்கை (C) மார்கழித்திங்கள் (D) கொல்களிறு

(iii) எழுவாய்த்தொடர்

(A) பாடினாள் கண்ணகி (B) காவிரி பாய்ந்தது

(C) அன்பால் கட்டினார் (D) வருக வருக

(iv) மரபு வழுவமைதி

(A) கத்துங்குயிலோசை (B) வாடா கண்ணா

(C) என் அம்மை வந்தாள் (D) இந்த மாறன் ஒருநாளும் பொய்கூற மாட்டான்

(v) முல்லை நிலக் கடவுள்

(A) முருகன் (B) இந்திரன் (C) வருணன் (D)திருமால்

**4.கோடிட்ட இடங்களை நிரப்புக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3**

(i) அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது ------------------

(A) புறத்திணை (B) கைக்கிளை (C) அகத்திணை (D) பெருந்திணை

(ii) ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது -----------------

(A) ஐய வினா (B) கொளல் வினா (C) ஏவல் வினா (D) அறிவினா

(iii) அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது -------------- ஆகும்.

(A) ஆண்பால் (B) பலவின்பால் (C) பெண்பால் (D) பலர்பால்

(iv) வினைப்பகுதியும் அடுத்துப் பெயர்ச் சொல்லும் அமைந்த

சொற்றொடர்களிலேயே ------------------- அமையும்.

(A) பண்புத்தொகை (B) உவமைத்தொகை

(C) அன்மொழித்தொகை (D) வினைத்தொகை

(v) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது ----

----------------------

(A) சொல்லிசை அளபெடை (B) ஒற்றளபெடை

(C) செய்யுளிசை அளபெடை (D) உயிரளபெடை

**5. இலக்கணக் குறிப்பு எழுதுக; (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3**

(i) ஈதல்

(A) தனிமொழி (B) தொடர்மொழி (C) பொதுமொழி (D) தொழிற்பெயர்

(ii) கெழீஇ

(A) சொல்லிசை அளபெடை (B) செய்யுளிசை அளபெடை

இன்னிசை அளபெடை (D) ஒற்றளபெடை

(iii) கேட்ட பாடல்

(A) வினைமுற்றுத்தொடர் (B) பெயரெச்சத்தொடர்

(C) வினையெச்சத்தொடர் (D) வேற்றுமைத்தொடர்

(iv) ஊழ் ஊழ்

(A) வினைத்தொகை (B) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

(C) பண்புத்தொகை (D) அடுக்குத் தொடர்

(v) காடனுக்கும் கபிலனுக்கும்

(A) வினையாலணையும் பெயர் (B) எண்ணும்மை

(C) உவமைத்தொகை (D) உம்மைத்தொகை

**6. கூறியவாறு செய்க; (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) 3X1=3**

(i) உடுப்பதூஉம் (அளபெடையை நீக்குக)

(A) உடுப்பதூஉம் (B) உடுப்பதும் (C) உடுப்பதூஊம் (D) உடுப்பதுவும்

(ii) பாடு (தொழிற்பெயராக்குக)

(A) பாடினான் (B) பாடி (C) பாடிய (D) பாடுதல்

(iii) மலர் (தொடர் மொழியாக்குக)

(A) மலர்ந்தது (B) மலர்கின்றது (C) மலர் மணம் வீசியது (D) மலரும்

(iv) பட்டினம், பாக்கம் (எந்நிலத்திற்குரிய ஊர்)

(A) குறிஞ்சி (B) முல்லை (C) நெய்தல் (D) பாலை

(v) வெற்றிலையும் பாக்கும் (உம்மைத்தொகையாக்குக)

(A) வெற்று இலை பாக்கும் (B) வெறு இலை பாக்கும்

(C) வற்றுஇலை பாக்கு (D) வெற்றிலை பாக்கு

**SECTION-C (MAIN COURSE BOOK) 31 MARKS**

**பகுதி இ (இலக்கியம்) 31 மதிப்பெண்கள்**

**7. பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. 2X1= 2**

(i) செய்க பொருளைச் --------------- செருக்கறுக்கும்

எஃகதனிற் கூரிய தில்

(A) பெறுநர் (B) விடுநர் (C) செறுநர் (D) வறுநர்

(ii) பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் -----------

நாகரிகம் வேண்டு பவர்

(A) நயத்தக்க (B) வியத்தக்க (C) பயத்தக்க (D) அயத்தக்க

**8. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5X1=5**

" ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ

வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ

தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ

ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ"

**வினாக்கள்;**

(i) இவ்வரிகள் இடம்பெற்ற நூல் எது?

(A) மகாபாரதம் (B) கந்தபுராணம் (C) கம்பராமாயணம் (D) ராமாயணம்

(ii) நெடுந்திரை- என்பதின் பொருள்

(A) அலை (B) பெரிய அலை (C) சிறியஅலை (D) ஆறு

(iii) வேழ நெடும்படை எது?

(A) குதிரைபடை (B) காலட்படை (C) தேர்ப்படை (D) யானை படை

(iv) ஏழமை வேடன் யார்?

(A) பரதன் (B) குகன் (C) கண்ணப்பன் (D) வியாசர்

(v) இப்பாடல் வரிகளை இயற்றிய ஆசிரியர் யார்?

(A) இளங்கோவடிகள் (B) கபிலர் (C) திருவள்ளுவர் (D) கம்பர்

**9. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3X3=9**

(i) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

(ii) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

(iii) '' மாளாத காதல் நோயாளன் போல் '' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

(iv) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

(v) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

**10. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3X5=15**

(i) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

(ii) மொழிபெயர்ப்பு பயன் குறித்து எழுதுக.

(iii) ஏன் செயற்கை நுண்ணறிவு முதன்மையானது?

(iv) அறவுணர்வும் தமிழர் மரபும் எவ்வாறு இருந்தது என்பதை விளக்குக.

(v) தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் குறித்து எழுதுக.

**SECTION-D (NON-DETAIL) 10 MARKS.**

**பகுதி-ஈ (துணைப்பாடம்) 10 மதிப்பெண்கள்**

**11. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக.**

**1X10=10**

(i) உரைநடையின் அணிநலன்கள்


(ii) புதிய நம்பிக்கை

(iii) புயலிலே ஒரு தோணி

**SECTION-E ( CREATIVE WRITING) 17 MARKS**

**பகுதி – உ (படைப்பாற்றல்) 17 மதிப்பெண்கள்**

**12.(அ) கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 1X3=3**



**FOR VISUALLY IMPARED CANDIDATES**

**(ஆ) பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.**

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்.

(ii) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

**13. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று வரைக.**

**1X8=8**

(i) செயற்கை உரங்கள் பயன்படுத்துவதால் மண் எவ்வாறு மாசுபடுகிறது என்பதை விளக்கி உன் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ii )உங்கள் பகுதியில் புதிய மருத்துவமனை ஒன்றைக் கட்டித்தருமாறு சுகாதார அமைச்சருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி அ. ராதை /அ. ராமன் எண்.5, கபிலர் தெரு, நேருநகர், சென்னை- 600 001.)

**14. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. 1X6=6**

(i) முன்னுரை- தமிழின் இலக்கிய வளம்- கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை – முடிவுரை.

(அல்லது)

(ii) முன்னுரை- சாலைப் பாதுகாப்பு முக்கியத்துவம்- சாலை விதிகளை மதிப்போம்- விதி மீறல் – முடிவுரை.

(அல்லது)

(iii) முன்னுரை- கிரீன்ஹவுஸ் வாயுக்களின் தாக்கம்- புவி வெப்பமடைதல்- புவி வெப்பமயமாதலின் தாக்கம் – முடிவுரை.